Hon. Minister whether this Government will take some intensive steps so as to increase silk production, where there is large potentiality in that area. Will this Government come forward to take some immediate steps to implement it intensively?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினருக்கே இது பற்றித் தெரியும். அவரது பகுதியில் ஸ்டேட் பார்மிங் முறையில் அத்தகைய முயற்சிக்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். அங்குள்ள விவசாயிகள் நிலத்தைச் சொந்தமாக்கவேண்டும்—குத்தகைக்கு வேண்டாம் என்கிறார்கள். நிலத்தைச் சொந்தமாக்கினால் அவர்கள் பட்டுப்புழுவுக்காக இந்தப் பயிரைத்தான் வைப்பார்களா என்பது சந்தேகம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் விவசாயிகளுடன் பேசி இது பற்றி ஒத்துழைப்புத்தர அவர்கள் முன்வரும்படி செய்ய வேண்டும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : குற்றாலம், செங்கோட்டைப் பகுதியில் அபிவிருத்தி செய்ய திட்டம் இருந்ததே, அது கைவிடப்பட்டுவிட்டதா? அல்லது அந்தத் திட்டம் செயல்பட இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசின் சார்பில் அங்கே ஒரு யூனிட் வைத்திருக்கிறோம். பெரும் அளவுக்கு இந்த இடத்திலே உற்பத்தி செய்ய வாய்ப்பு இல்லை என்றே தெரிகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : கைத்தறித் துணிகளுக்கு ரிபேட் கொடுப்பதுபோல அரசாங்கம் பட்டுச்சேலைகளுக்கும் தள்ளுபடி கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தள்ளுபடி என்றாலே அரசாங்கப் பணம் செலவழியும் என்றுதான் பொருள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பனை ஓலைப்பொருட்கள்.

*309 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பனையோலை, ஈக்கி, நார் முதலானவற்றைக்கொண்டு செய்யப்படும் குடிசைத் தொழில்களை நம்பி வாழும் இராமநாதபுரம் மாவட்டத்து லட்சக்கணக்கான மக்கள், உற்பத்தி செய்யும் பொருள்களுக்குப் போதிய விலைவாசி, மார்க்கெட் வசதிகள் இல்லாமல் நசித்து வருவதைத் தடுக்க, அவர்களுக்கு நல்வாழ்வளிப்பதற்கு அரசு எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : "இராமநாதபுரம் பனையோலைப் பொருட்கள் உற்பத்தி செய்வோர் கூட்டுறவு குடிசைத் தொழிற்சங்கம்" என்ற ஒரு கூட்டுறவு தொழிற்சங்கம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இயங்கி வருகிறது. அதன் உற்பத்திப் பொருட்கள் அரசு விற்பனை நிலையங்கள் மூலமாகவும் புதுடில்லியிலுள்ள மத்திய அரசு கைத்தறி மற்றும்—கைவினைப் பொருட்கள் கழகம் மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தரமுள்ள பொருட்கள் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

1971 ஜூலை 19]

மேலும், இராமேஸ்வரத்தில் பனையோலைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தொழில் துறையால் ஒரு வியாபார நிலையம் நடத்தப் பட்டு வருகிறது. இந்த நிலையத்தில் தரமுள்ள பலதரப்பட்ட பனையோலைப் பொருட்கள் செய்வதற்கு பயிற்சி அளிக்கப்படு கிறது. இந்நிலையத்தின் பொருட்கள் அரசுத்துறை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

திரு. கே. டி. கே தங்கமணி : இராமநாதபுரம் மாவட்டத்தில் மதுவிலக்கு ரத்து செய்துவிட்டதையொட்டி இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இராமநாத புரம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். எனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிக மான கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்தி இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். முற்பகல் 9-30

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எங்கெங்கே கூட்டுறவுச் சங்கம் அமைக்க முன்வருகிறார்களோ அங்கே எல்லாம் உதவி செய்கிறோம். சங்கம் அமைப்பதை விட இதில் உற்பத்தி செய்கிற பொருள்களை விற்பனை செய்வது தான் கஷ்டமாக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, பனை ஓலைப் பொருட்களுக்கெல்லாம் வெளிநாடுகளில் அதிக கிராக்கி இருக்கிற தென்றும், ஆனால் அவர்கள் கேட்கும்போது நாம் அனுப்புவதில்லை யென்றும் புகார் சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட புகார் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நாம் அனுப்பி யது விற்பனையாவதில்லை என்றுதான் சொல்லப்படுகிறது. ஜப்பானிய நாடு கூட்டுறவுத் துறையில் "ஹாண்டிக்ராஃப்ட்ஸ் பொருட்களை, அதாவது பாய் முதலிய பொருள்களை அனுப்பி அங்கேயும் போட்டி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. நாம் மாவட்டங்கள்தோறும் விற்பனைக்கூடங்கள் அமைத்து உற்பத்தி யாகும் பொருட்களைச் சேகரித்து, வெளிநாடுகளுக்கு அனுப்புவது என்றும் பரிசிலனை செய்திருக்கிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, பனை ஓலை யால் செய்யக்கூடிய பொருள்களை நாம் வெளிநாடுகளுக்கு அனுப் புகிறோம் என்று கூறப்படுகிறதே, அதனால் நம் நாட்டிற்குக் கிடைக் கக்கூடிய அந்நியச் செலாவணி எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, பனை ஓலையால் செய்யப் படுகிற பொருள்களுக்கு அதிக கிராக்கி இருக்கிறது. இருந்தாலும் கூட, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளுக்குக் குறைந்த ஊதியம்தான் கிடைக்கிறது. ஆகவே, தொழிலாளி களுக்கு அதிக ஊதியம் கிடைக்கும்படியாக அரசாங்கம் ஏதாவது திட்டத்தை செயல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆங்காங்கு நாம் பயிற்சி நிலையம் வைத்திருக்கிறோம். உற்பத்தி செய்கின்ற பொருள்களை விற்பனைக்கு வைத்திருக்கிறோம். அதிகமான பொருள்கள் விற்பனையடைந்தால், தொழிலாளிகளுக்கு அதிக ஊதியம் கிடைக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, பனை ஓலையால் செய்யப்படும் பொருட்களை எப்படி எப்படியெல்லாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பொதுமக்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, அதற்கு வேண்டிய அளவு விளம்பரத்தை அரசாங்கம் செய்வதற்கு அந்தந்த மாவட்டங்கள்தோறும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மாவட்டங்களின் தலைநகரங்களில் விற்பனை செய்யும் நிலையம் அமைப்பது என்று முடிவைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். ஒரு சில மாவட்டங்களில் விற்பனைக்கூடங்கள் இருக்கின்றன. ஒரு சில இடங்களில் பயிற்சி நிலையங்களை வைத்து அதன்மூலம் பலர் இந்தப் பொருட்களை வாங்குவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

பாய் விற்பனைக்கு வெளிச்சந்தைகள்

* 310 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பத்தமடையில் நெய்யப்படும் பட்டுப்பாய்களுக்கும் வந்தவாசி, வீரநல்லூர், சீர்காழி ஆகிய இடங்களில் நெய்யப்படும் கோரைப்பாய்களுக்கும் போதிய வெளிமார்க்கெட்டுகள் பிடிக்க ஆவன செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த பாய்களை தனியார்கள் வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பி, அதனால் நல்ல லாபம்பெறுகிறார்கள். சென்னையிலும் பம்பாயிலும் உள்ளவர்கள் இந்த பாய்களை வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். பத்தமடை பாய் புகழ்பெற்றது. அமெரிக்க நாட்டில் இந்தப் பாய்களை மிகவும் விரும்பி வாங்குகிறார்கள். ஆகவே, அரசாங்கமே இந்தப் பாய்களை எல்லாம் வாங்கி ஏற்றுமதி செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பில் விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்ட்டியூடும், மத்திய அரசாங்கத்தின் சார்பில் "ஹேண்ட்லூம் அண்டு ஹேண்டிக்ராப்ட்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் கார்ப்பொரேஷனும்" இந்த முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.